# மக்களாட்சி இயக்கம் : தமிழ் நாடு


கௌரவத்தலைவர்கள்
நீதிபதி V.R. கிருஷ்ணய்யர்
பேராசிரியர்: ரஜினிகோத்தாரி
நீதிபதி : H. சுரேஷ்
T.S. சங்கரன்

தலைவர்
S. ராகவன்

துணைத்தலைவர்கள்
நீதிபதி: எஸ். எம். தாவூது
நீதிபதி: A.S. பெயின்ஸ்
பேராசிரியர்: தலிப்சிங்
டாக்டர்: மாதவி தம்பி
K. சிவானந்த
டாக்டர்: சஞ்சீவினி
டாக்டர்: L.P. சிங்

ஒருங்கிணைப்பாளர்
பிரகாஷ்ராவ்

பொருளாளர்:
உமா : சேத்:



தகவல் தொடர்புக்கு
முகவரி
Lokraj Sangathan
E-392 சஞ்சய்காலணி
OKHLA PHASE – II
NEW DELHI – 110020
Phone: 098185 – 75435

மக்களாட்சி இயக்கம்
35, வால்டாக்ஸ் சாலை,
சென்னை – 600079
Phone- 9245724635


பெறுநர்,

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

15வது மக்களவைத் தேர்தலில் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியிலிருந்து, மக்கள் வேட்பாளராக, வேட்புமனுத்தாக்கல் செய்துள்ள திரு.வில்சன் அவர்களை ஆதரித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் புத்தன்சந்தை, செம்மங்காலை, கடையாலுமூடு, குஞ்சாலுவிளை, பாலுக்குழி, முக்கூட்டுக்கல், இடைக்கோடு, அருமனை, வெள்ளாங்கோடு, மற்றும் விளவங்கோடு தாலுகாவிலுள்ள பேரூராட்சிகள், ஊராட்சிகளில் செயல்படுகின்ற மக்கள் குழுக்கள் கூடி திரு. வில்சன் அவர்களை வேட்பாளராக்கி போட்டியிட முடிவு செய்திருக்கிறது. அவருடைய வேட்பாளர் தகுதியை ஆதரித்து பிரபல பத்திரிக்கையாளர்கள், மனித உரிமை இயக்கப் போராளிகள், கல்வியாளர்கள், வழக்குரைஞர்கள், நீதிபதிகள், தொழில்சங்கபிரமுகர்கள், மற்றும் பலர் ஒப்புதல் அளித்து ஆதரித்துள்ளனர். வேட்பாளர் திரு. வில்சன் அவர்கள் மக்கள் இயக்கங்களின் அமைப்பாளர் மற்றும் ஆர்வமிகுந்த போராளி என்பது அனைவரும் அறிந்தவையே.

நடைபெறவிருக்கும் தேர்தலில் தங்களுடைய செய்திதாள் மற்றும் பிற இதழ்களில் திரு.வில்சன் அவர்கள் தேர்தல் களத்தில் போட்டியிடுவது தொடர்பான செய்திகளை வெளியிட வேண்டுமாய் நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் வெளியிடும் செய்திகளால் மக்கள் வேட்பாளர் தொகுதி வாக்காளர்களுக்கிடையில் பிரபலமாக்கப்படுவார். என்றும், ஜனநாயகத்தின் மீதான விவாதங்களில் முன்னேற்றம் காணமுடியும் என்றும் நம்புகிறோம்.

தேர்தல் தொடர்பாக நீங்கள் மக்கள் வேட்பாளர் திரு.வில்சன் அவர்களை சந்திக்கவோ, பேட்டி எடுக்கவோ, செய்திகள் பெறவோ விரும்பினால் எங்களிடம் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வேட்பாளர் சந்திப்புக்கு மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்து தருவோம்.

திரு : S. ராகவன்
தலைவர் : மக்களாட்சி இயக்கம்
புதுடில்லி

திரு. T.S. சங்கரன்
கௌரவத் தலைவர் மக்களாட்சி இயக்கம்
சென்னை.

**தகவல் தொடர்புக்கு,**
**தேர்தல் பிரச்சார ஒருங்கிணைப்பாளர்**
திரு P. ஆப்ரகாம்
தொலைபேசி எண்: 94874 – 22519ல் தொடர்பு கொள்ளலாம்.


e-mail: lokrajsangathan@yahoo.com
Web: www.lokrajsangathan.org

# மக்களாட்சி இயக்கம் : தமிழ் நாடு

கௌரவத்தலைவர்கள்
நீதிபதி V.R. கிருஷ்ணய்யர்
பேராசிரியர்: ரஜினிகோத்தாரி
நீதிபதி : H. சுரேஷ்
T.S. சங்கரன்

தலைவர்
S. ராகவன்

துணைத்தலைவர்கள்
நீதிபதி: எஸ். எம். தாவூது
நீதிபதி: A.S. பெயின்ஸ்
பேராசிரியர்: தலிப்சிங்
டாக்டர்: மாதவி தம்பி
K. சிவானந்த்
டாக்டர்: சஞ்சீவினி
டாக்டர்: L.P. சிங்

ஒருங்கிணைப்பாளர்
பிரகாஷ்ராவ்

பொருளாளர்:
உமா : சேத்:

தகவல் தொடர்புக்கு
முகவரி
Lokraj Sangathan
E-392 சஞ்சய்காலனி
OKHLA PHASE – II
NEW DELHI – 110020
Phone: 098185 – 75435

மக்களாட்சி இயக்கம்
35, வால்டாக்ஸ் சாலை,
சென்னை – 600079
Phone- 9245724635

## கன்னியாகுமரி மக்களவை தொகுதியில் போட்டியிடும் மக்களுடைய வேட்பாளர், திரு. I. வில்சன் அவர்களை ஆதரிக்கும் அறிக்கை.

அன்புள்ள நண்பர்களே!

நடைபெறவிருக்கும் 15வது மக்களவைத் தேர்தலில் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் மக்களுடைய வேட்பாளராக திரு. I. வில்சன் அவர்களை மக்களே முடிவு செய்து வேட்பு மனு தாக்கல் செய்து இருப்பதை நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

திரு. I. வில்சன் மேல்நிலைக்கல்வி கற்றுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசியல் மற்றும் சமூகப்பணிகளில் ஈடுபட்டு பொதுமக்கள் மத்தியில் நன்கு அறிமுகமான போராளியாக செயல்பட்டுவருகிறார். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளுக்காக, ரப்பர் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிவாழ் மக்களின் மறுவாழ்வுக்காக, மனித உரிமை மீறல்களுக்கெதிராக, அரசு பயங்கரவாதத்திற்கு எதிராக, தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கல் கொள்கைகளுக்கெதிராக வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வுக்கு எதிராக தமிழக காவல் துறையினரின் அடக்கு முறைக்கெதிராக அரசியல் படுகொலைகளுக்கெதிராக போராடியுள்ளார். கன்னியாகுமாரி மாவட்டம் எடேசா ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்கு சென்று இருக்கிறார்.

உழைக்கும் மக்களாகிய தொழிலாளர்கள் விவசாயிகளுடைய ஆட்சி அதிகாரம் மற்றும் உண்மையான மக்களாட்சிக்காகவும் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார். தொழிலாளர்கள், விவசாயிகளாகிய உழைக்கும் மக்களிடம் அரசியல், பொருளாதாரம், சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றி, விவாதித்து அவர்களை அணிதிரட்டிடும் வரலாற்று கடமையை செய்து கொண்டிருப்பதோடு, நடப்பிலுள்ள அரசியல் வழிமுறை, தேர்தல் வழிமுறைகளை முழுமையாக மாற்றி, மக்களுக்கே அனைத்து அதிகாரம் என்ற நேரடி ஜனநாயகத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு நேர்மையான அரசியல்வாதி என்ற பெருமையுடன் மக்களாட்சி இயக்கத்தின் ஆணிவேராகவும் சிறந்த போராளியாகவும் செயல்பட்டுவருகிறார்.

தேர்தல் நடைபெறவிருக்கும் இக்காலகட்டத்தில் சுயநல அரசியல்வாதிகளும், குற்றச்செயல்களில் தொடர்புடையவர்களும் பணபலம், படைத்தால் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பெரும் தொழில் நிறுவனக் குடும்பங்களுக்கே சேவை செய்து மக்கள் விரோதத்திட்டங்களை தொடருகின்ற இக்கால கட்டத்திலும் திரு. வில்சன் அச்சமில்லாமல் இளமைத்துடிப்புடன் தேர்தல்களத்தில் நிற்கிறார். வாக்காளர்களாகிய உழைக்கும் மக்களைச் சந்தித்து வாக்கு கோரி வரவிருக்கிறார்.

எனவே மக்கள் வேட்பாளர் திரு I. வில்சன் அவர்களுக்கு 13.05.2009ம் நாள் நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, மக்கள் வேட்பாளர் திரு. I. வில்சன் அவர்களுடைய தேர்தல் பிரச்சாரா இயக்கத்தில் பங்கெடுத்து ஆதரவளிக்கும்படியாகவும், கேட்டுக்கொள்கிறோம்.

மக்கள் வேட்பாளர் திரு. I. வில்சன் அவர்களின் வேட்பு மனுவை கீழே கையொப்பமிட்டுள்ளவர்களாகிய நாங்கள் ஆதரிக்கின்றோம்.

கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியின் மக்கள் வேட்பாளர் திரு I. வில்சன் அவர்களைப்பற்றிய குறிப்புகள்:
வயது: 44
முகவரி: வீட்டு எண் 3/51-A-1 அயக்கோட்டுவிளைவீடு
செம்மண்காலா; புத்தன்சந்தை,
இடைக்கோடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629152
தொழில்: ஓவியர்

முன்மொழிந்தவர்கள்:

புத்தன்சந்தை, செம்மங்காலை, கடையாலுமூடு, குஞ்சாலுவிளை, பாலுக்குழி, முக்கூட்டுக்கல், இடைக்கோடு, அருமனை, வெள்ளாங்கோடு, மஞ்சாலுமூடு, மற்றும் விளவங்கோடு தாலுகாவிலுள்ள பல்வேறு பேரூராட்சிகள், ஊராட்சிகளில் செயல் படுகின்ற மக்கள் குழுக்கள்

மக்கள் வேட்பாளரை ஆதரிப்போர்:

S. ராகவன்: தலைவர்: மக்களாட்சி இயக்கம்,
தோழர் லால்சிங், பொதுச்செயலாளர் இந்தியகம்யூனிஸ்ட்கெதர் கட்சி
சந்தோஷ்விஸ்வகர்மா, அவைத்தலைவர் இந்திய இளைஞர் ஒற்றுமைக்குழு
சுச்சாரிதா, செயலாளர் முற்போக்குமாதர் சங்கம்
பிரசாந்த்பூஷன்: வழக்கறிஞர் உச்சநீதிமன்றம், புதுடில்லி
சோனாலிபோஸ்: போட்டோ அமைப்பாளர்
சிவானந்த்கனவி: முதுநிலைபத்திரிக்கையாளர்
சித்தார்த்வரதராஜன்: முதுநிலைபத்திரிக்கையாளர்
V.R. கிருஷ்ணய்யர்: உச்சநீதிமன்ற நீதிபதி (பணிநிறைவு)
பெட்டபிராட்டாபெயின்: விஞ்ஞானி மற்றும் போட்டோ அமைப்பாளர்
சுபாஷ்பட்நாகர்: செயலாளர் கட்டிடத் தொழிலாளர் பஞ்சாயத்து சங்கம்
T.S. சங்கரன் இந்திய ஆட்சிப்பணி (மத்திய தொழிலாளர் துறை இணைச்செயலாளர் (பணிநிறைவு)
எஸ்.எம். தாவூது: நீதிபதி பணி நிறைவு: மும்பை உயர்நீதி மன்றம்
ஹாஸ்பெட்சுரேஷ்: நீதிபதி: பணி நிறைவு: மும்பை உயர்நீதி மன்றம்
அஜித்சிங்பெயின்ஸ்: நீதிபதி பணி நிறைவு: பஞ்சாப் - அரியானா, உயர்நீதி மன்றம் மற்றும் பஞ்சாப் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர்
டாக்டர் ஸ்ரீமதிசக்ரபார்தி: சீனக்கல்வியகம் டில்லிபல்கலைக்கழகம்
டாக்டர் மாலபிகாமஜீஉம்தார்: தத்துவவியல் ஆசிரியர், கமலா நேரு கல்லூரி, டில்லிபல்கலைக்கழகம்
டாக்டர் நந்தினி சுந்தர் - டில்லி பல்கலைக்கழகம்
டாக்டர் மாதவி தம்பி - டில்லி பல்கலைக்கழகம்
டாக்டர் கமலா சங்கரன் - டில்லி பல்கலைக்கழகம்
டாக்டர் வெங்கடேஷ் சுந்தரம்
சூரியகாந்த்சின்ஜி – துணைத்தலைவர் - ஆயத்த ஆடைகள் தொழிலாளர் சங்கம்.
E. சரவணமுத்துவேல் - துணைத்தலைவர் - தமிழகவிவசாயிகள்சங்கம் - தமிழ்நாடு
விமலாராமகிருஷ்ணன் - சமூகப்போராளி
சாருசுதன் கஸ்தூரி – பத்திரிக்கையாளர்
ரவீந்தர்சிங் பெயின்ஸ் - வழக்குரைஞர், பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்றம்.
டாக்டர் - சஞ்சீவினி ஜெயின் - மும்பைபல்கலைக்கழகம்
டாக்டர் - L.Pசிங் - மக்கள் ஜனநாயக இயக்கம் - மணிப்பூர்.
பிரகாஷ்ராவ் - ஒருங்கிணைப்பாளர், மக்களாட்சி இயக்கம்.
அனந்தநாரயணன் - இந்திய அறிவியல் இயக்கம் - பெங்களுர்; மற்றும் பல்வேறு மக்கள் அமைப்புகளின் பொறுப்பாளர்களும் ஆதரித்துள்ளனர்.